விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 212 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 03 சனிக்கிழமை (19.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




வடக்கு மனிதப் புதைகுழிகள்

# விரைவில் உண்மைகள் வெளிக்கொண்டு வரப்படும்

## நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



(கொழும்பு)

வடக்கு மனிதப் புதைகுழிகள் தொடர்பில் வெகுவிரைவில் உண்மைகள் வெளிக்கொண்டு வரப்படும் என நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் தயாசிறி முறைப்பாடு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்றுக் காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பிரசன்னமாகினார்.

இலங்கை பெற்றோலியக்

15ஆம் பக்கம் பார்க்க

ஐஸ் போதையுடன்

## வவுனியாவில் மூவர் கைது

(வவுனியா)

வவுனியாவில்ஐஸ்போதைப் பொருளுடன் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸார் கூமாங்குளம்

15ஆம் பக்கம் பார்க்க

யாழில் காணாமல்போன

## லலித், குகன் மீதான விசாரணை மீண்டும் ஆரம்பம்



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் காணாமல்போன லலித் மற்றும் குகன் மீதான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் காணாமல்போன லலித் மற்றும் குகன் மீதான விசாரணை தொடர்

15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் அமைச்சர் ராஜிதவின் முன் பிணை மனு நிராகரிப்பு



(கொழும்பு)

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தம்மைக் கைது செய்யப்படுவதற்கு முன்னர், முன்பிணையில் விடுவிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, தாக்கல் செய்த முன்பிணை மனுவை நிராகரித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மற்றும்

15ஆம் பக்கம் பார்க்க

## வல்லிபுரத்தில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் புலோலி, வல்லிபுரக்குறிச்சியைச் சேர்ந்த பொன்னையா தேவராசா என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த ஆறாம் திகதி மாலை பருத்தித்துறை - மருதங்கேணி

15ஆம் பக்கம் பார்க்க

## உப்பு வியாபாரம் செய்யத் தெரியாதவர்கள் எப்படிக் கல்வியைச் சீர்திருத்த முடியும்

### சம்பிக்க ரணவக்க கேள்வி



(கொழும்பு)

உப்பு வியாபாரம் கூடச் செய்ய முடியாதவர்களுக்கு எவ்வாறு கல்வியைச் சீர்திருத்தம் செய்ய முடியும் என முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

02ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரி கெருடாவிலில் இளைஞன் மீது கத்திக்குத்து

### தொலைபேசி அழைப்பெடுத்து வரவழைத்துத் தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இளைஞன் ஒருவர் மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## வத்திராயனில் வெடிகுண்டு ஒன்று மீட்பு



15ஆம் பக்கம் பார்க்க

## உதவிப் பிரதேச செயலாளர் தீயில் எரிந்து உயிரிழப்பு

### கணவரான கிராம சேவகர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி உதவிப்பிரதேசசெயலாளராக கடமையாற்றியபோது தீயில் எரிந்து உயிரிழந்த தமிழினியின் கணவரான கிராமசேவையாளர் சதீஸ் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் தீயில்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## University of Professional Studies
R.A.De Mel Mawatha, Colombo 03.

### Department of Law

**சட்டமாணி கற்கைகளுக்கான மாணவர் அனுமதி - 2025**

**Admission of Students for the Academic year 2025**

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையினால் சட்டத்துறை சார்ந்த பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கற்கை நெறிகள் : (பிரிவு : 4)**

**Course 1 : Diploma Courses**
**Course 2 : Degree of Bachelor of Laws (LL.B)**

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தினால் Diploma in Law, LL.B. Programme கற்கைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆறு மாத காலங்களினை கொண்டதாக Course I கற்கை நெறியும் மூன்று வருட காலங்களினை கொண்டதாக (விசேடம் : 4 வருடங்கள்) Course 2 கற்கை நெறியும் காணப்படுகின்றது.

**நன்மைகள் :**

- க.பொ.த (சா/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் கற்கைநெறியில் இணைந்து கொள்ள முடியும்.
- க.பொ.த (உ/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள். உத்தியோகத்தர்கள் LL.B. கற்கைகளில் இணைந்து கொள்ள முடியும்.
- சட்டக் கல்லூரி பரீட்சைகள், சட்டக் கல்லூரியின் Attorney-at-law பதிவு. கற்கைகளினை பூரணப்படுத்த முடியும். ஆங்கில மொழி ஊடாக கற்றல். பரீட்சைகள்.
- விரிவுரைகள் சட்டத்தரணிகளினால் நேரடி, Zoom ஊடாக மேற்கொள்ளப்படு கின்றது. தமிழ் மற்றும் ஆங்கில விரிவுரைகள்.
- இலகு தவணை கட்டண வசதி.
- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமுடையது.

**விண்ணப்பிக்கும் முறை :**

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை Whats app/ மின்னஞ்சல் ஊடாக 31.07.2025 இற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிக விபரங்களினை இணையத்தளம் ஊடாக பார்வையிடலாம்.

ஏற்கனவே 26.06.2025 ற்கு முன் விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாதிரி விண்ணப்பப் படிவம் :**

**Department of Law**
**Admission of Students for the Academic Year 2025**

1. Full Name :.................................................
2. Address : .................................................
3. Date of Birth :.............................................
4. NIC No :.....................................................
5. Educational Qualification :..........................
6. Professional Qualification :.........................
7. Mobile No :...................................................

Date :................ Signature :................

**தெரிவு முறை :**

நுழைவுப் பரீட்சை/நேர்முகப் பரீட்சை/பேரவையின் இறுதி முடிவு.

*மேலதிக விபரங்களிற்கு :*

**உதவிப் பதிவாளர்,**
**இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம்,**
**கொழும்பு 03.**

**Whats app : 074 112 7636**
**Mobile : 074 234 9120/077 570 4893**
**e-mail : upsrecruitment25@gmail.com**
**Web : www.upscampus.lk**
**Colombo/ Batticalo/ Trinco/ Kandy/ Vavuniya/ Jaffna/ Killinochchi/ Mullitivu/ Mannar**

(4842)


# நாடு முழுவதும் சுற்றி வளைப்பு 1,461 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் நடத்தப்பட்ட சிறப்பு சுற்றிவளைப்பின் போது 1,461 சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரன்மல் கொடிதுவக்குவின் வழி காட்டுதலின் கீழ் 14,000க்கும் மேற்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளை பயன்படுத்தி இந்த நடவடிக்கை நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்டது.

அதன்போது 46 வாகனங்கள் மற் றும் 51 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

அத்தோடு, இந்த நடவடிக்கையின் மூலம் குற்றங்களுக்கு நேரடியாக பங்களித்த 107 பேரும், ஆயுதப் படைகளில் இருந்து தப்பியோடிய 7 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலும் ஹெரோயின், ஐஸ், கஞ்சா மற்றும் சட்டவிரோத மதுபானங்களை யும் பொலிஸார் பறிமுதல் செய்து ள்ளனர். (ம-7)

# யாழ். வந்தார் சபாநாயகர் ஜெகத் விக்கிரமரத்ன



(யாழ்ப்பாணம்)

சபாநாயகர் டாக்டர் ஜெகத் விக்கி ரமரத்ன நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன் போது நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் சிறப்பு வழிபாடாற்றிய தோடு வரலாற்று சிறப்பு மிகு இடங் களிற்கு சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் கோட்டைக்கு விஜயம் செய்த சபாநாயகர் அங் குள்ள வரலாற்றுச் சின்னங்கள் அவற்றின் சிறப்பு போன்றவற்றை கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து தெற்காசியாவின் அறிவுக்களஞ்சியமான யாழ்ப்பா ணம் பொது நூலகத்துக்கு சென்ற சபாநாயகர் நூல்களைப் பார்வையிட்ட தோடு வாசகர்களுடனும் நட்பு ரீதி யான கலந்துரையாடலில் ஈடுபட்டி ருந்தார். (ம-7,33)

## உப்பு வியாபாரம்...

அதன்போது, மேலும் கருத்து தெரி வித்த அவர், பாரிய திட்டங்களுக்கு செல்ல வேண்டாம்.உங்களின் சிறிய மூளைக்கு ஏற்ற செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

பிரதமர் கூறுவது போல் நாம் கல் வியை அரசியல் ஆக்கவில்லை. உங்களுடன் இருக்கும் ஜே.வி.பியே 1965 ஆம் ஆண்டு கல்வியை அரசியல் ஆக்கியது.

பல்கலைக்கழகங்களை தமது அர சியல் செயற்பாட்டில் தலைமை நிலை யங்களாக மாற்றி பல்கலைக்கழகங் களை மூடுவதற்கும் வழிசமைத்த வர்கள்.

அது மட்டுமல்ல தேசிய பல்கலைக் கழக மாணவர் ஒன்றியங்களை அமை த்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு பகிடிவதை செய்தவர்கள் இன்றும் அவர்கள் பாராளுமன்றத்தில் இருக் கிறார்கள் என்றார்.

அதனால் எமக்கு கையை நீட்டு முன் நீங்கள் கண்ணாடி முன் நின்று பார்த் துக் கொள்ளுங்கள் என்றார். (ம-7)

## விரைவில்...

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

செம்மணி மனிதப் புதைகுழி உட் பட வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் விரைவில் உண்மைகள் வெளி வரும்.

இதற்கு அரசு ஒருபோதும் தடை யாக இருக்க மாட்டாது.

வடக்கு மனி தப் புதைகுழிகள் தொடர்பில நீதிமன்றங்களில் இடம் பெறும் விசாரணைக ளுக்கு அரசு முழுமையான ஒத்துழைப்பு வழ ங்கும். உண்மை கள் வெளிவந்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ப தில் அரசு உறுதி யாக உள்ளது என்றார். (ம-7)


## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்க்காணும் ஆட்கள் தேவை.

1. Manager (2 Years experience)
2. Administration
3. Computer Billing + Cashier
4. Sales Assistant
5. Driver - AD Licence
6. Packing - பொதியிடல்
7. part time - 5.00 pm to 10.00pm

- வயது எல்லை 18 - 35
- யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :

**077 419 5209**
**077 419 5218**

(4830)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# ஹென்றீசியன் சங்கமம் - 2025

## பழைய மாணவர் ஒன்றுகூடலும் கௌரவிப்பும்

### அதிபரின் ஆசிச் செய்தி

இளமைப் பொழிவின் மிடுக் கொட்டும் இளவாலை யூரின் கடந்த 118 ஆண்டு காலமாக இளமைப் பொலிவுடன் கல்வி. விளையாட்டுத் துறைகளில் தனியொரு முத்திரை பதித்தாளும் புனித ஹென்றியரசர் கல்லூரியின் ஆண்டு நிறைவில் பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்விற்கும் மற்றும் சாதனையாளர் கௌரவிப்பிற்கும் கல்லூரி முதல்வர் என்ற வகையில் ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். நம் கல்லூரியின் 118வது ஆண்டு தினத்தை நாம் சிறப்புடன் கொண்டாடும் இந்தச் சூழலில், கல்வியின் பயணத்தை உருவாக்கிய. வளர்த்த. உயர்த்திய அனைத்துப் பழைய மாணவர்களையும் இன்று நாம் மீண்டும் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். கடந்த பல தலைமுறைகளாகச் சீருடை மாணவனாகத் தொடங்கி. இன்று பல துறைகளில் சாதனை படைத்த நீங்கள் அனைவரும். நம் கல்லூரியின் புகழ் முத்துச் சுடர்களாக உள்ளீர்கள். இந்த நிகழ்வில். பல துறைகளில் சிறந்த சாதனைகள் புரிந்த சாதனையாளர்களை கௌரவிப்பதும். இளைய தலைமுறையினருக்கு ஓர் முன்னுதாரணமான ஒளி விளக்காக இருப்பதும் மிகப்பெரும் பெருமை. உங்கள் முயற்சிகளும் உழைப்பும் கல்லூரித்தாயின் வளர்ச்சியில் கொண்டிருக்கும் பாசத்தை நினைவுகூரும் இந்த செயலும். நமக்கு பின்வரும் மாணவச் செல்வங்கள் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டியாக இருக்கும். எமது கல்லூரி தொடர்ந்து கல்வியில் சிறந்து விளங்க. மாணவச் செல்வங்கள் ஒளிவீசி வளர. ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் வழிகாட்ட. பழைய மாணவர்கள் உறுதுணையாக இருக்க எனது ஆசிகளும் வாழ்த்துக்களும் என்றும் உரித்தாகுக.

**அருட்தந்தை ஆ.மைக் மயூரன்,**
**அதிபர்,**
**யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.**



ST. HENRY'S COLLEGE, ILAVALAI
OLD BOYS' ASSOCIATION

ANNUAL GET TOGETHER - 2025

Date : 19th July 2025
Time : 2.45 p.m. Inter - Batch Futsal,
6.00 p.m. - Henrician Sangamam
Venue : St. Henry's College, Ilavalai

**President**
**Mr.S.Peter Bienvenu**

**Chief Guest**
**Dr. Paramananthan Sajeevan**
Consultant Paediatric Surgeon, National Hospital Kandy

**Special Guest**
**Mr.Alfred Kamalas Gresian**
OBA France

**Honourees of Henrician Alumni Awards - 2025**
**Mr.Packiyanather Theoginas**
Technical Officer (Special Grade)
Office of Regional Assistant
Commissioner of Local Government

**Mr.Kanagaratnam Sasikumar N.T.O**
Teacher - Ilavalai Convent M.V
Director - Northern Sports College

**Executive Committee**
**SHC OBA Ilavalai**

### பழைய மாணவர் சங்கத் தலைவரின் செய்தி


இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 118 ஆவது கல்லூரி தினவிழாவிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"நாம் அனைவரும் ஹென்றீசியன்" என்று தரணியில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு கல்லூரியின் நாமத்தை இலங்கையில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் புகழ் மிளிரத்தக்க வகையில் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சாதனைகள் பலவற்றை புரிந்துவரும் எம் கல்லூரித்தாயின் மாணவச் செல்வங்கள் இவர்களுக்கு எப்போதும் உற்சாகமும் பயிற்சியும் ஆதரவும் வழங்கி வரும் அதிபர். உபஅதிபர். ஆசிரியர். பெற்றோர்கள். அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் நலன்விரும்பிகள் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலுமிருந்தும் உதவி வரும் பழைய மாணவர்கள் அனைவரையும் இந் நேரத்தில் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து உவகை பொங்க மனமார வாழ்த்திப் பாராட்டி நன்றியையும் கூறிநிற்கின்றேன். கல்லூரி அன்னையின் சாதனைகள் மேலும் தொடர வாழ்த்துக்கள்


**"கடின உழைப்பு எதையும் வெல்லும்"**

**செ.பீ.பியன்வெனு (J.P)**
**தலைவர், பழைய மாணவர் சங்கம் - தாய் சங்கம்**
**புனித ஹென்றியரசர் கல்லூரி**

## ALL ISLAND PHYSICAL TRAINING RUNNER UP - 2024



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பௌதிகவியல் **பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன்** அவர்கள் சிங்கப்பூரிலிருந்து வெளியிடப்படும் **"ஆசிய விஞ்ஞானி"** எனும் முன்னணி சஞ்சிகையின் தலைசிறந்த ஆசிய விஞ்ஞானிகள் நூறு பேரின் பட்டியலில் இடம்பெற்றுள்ளார். இவருக்கு எமது ஹென்றீசியன் குடும்பம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்



**Prof. P. Ravirajan** (Henrician)
Senior Professor of Physics
BSc Hons in Physics(Jaffna)
MSc (Material Physics) (Peradeniya)
DIC, PhD (London, UK)

## A/L - 2023 பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள்



**Arunthavam Anat Jaanusan**
Arts & Culture
University of Jaffna



**R.Mithun**
Hindu Civilization
University of Jaffna



**Jude Vensar Anastan**
Tourism Management
University of Sabaragamuwa



**Sanogikan Mariathas**
Information Technology (B.Tech.)
University of Anna, Thiruchirappalli,
Tamil Nadu, India.


**OLYMPIA SPORTS**
No.273, K.K.S Road, Jaffna.
021 222 3490 / 077 806 0267
077 675 1646 / 077 533 5004
olymplasportsjaffna@gmail.com

**நிரோ வெதுப்பகம்**
கல்லூரி வீதி, இளவாலை.
தொ.பே:
076 564 9291

**லில்லி பான்சி**
கல்லூரி வீதி, இளவாலை.
தொ.பே:
077 609 4479

**மறோன் தச்சு தொழிலகம்**
நல்லாயன் வீதி, இளவாலை.
தொடர்புகளுக்கு:
077 901 9972

**GLOBAL CONSTRUCTION**
Soorawathai, Chunnakam.
012 224 1205
077 231 6581

**ரேஸ்ரா TASTRAA**
No.41, Kalasalai Road,
Thirunelvely, Kopay.
076 440 0816

**இராவணா பல்பொருள் அங்காடி**
காரைநகர் வீதி, சித்தங்கேணி.
021 222 4773
077 088 3141

**NORTHERN SPORTS COLLEGE**
சிறுவர்களுக்கான பயிற்சிகள்
Table Tennis
Badminton Chess
Tennis Football
கைதடி வீதி, மருதனார்மடம்.
077 808 0267, 021 205 9631

**Pan City**
பண்டத்தரிப்பு
021 225 1771
077 072 0512
pancity08@gmail.com

**J.S.R SOLAR POWER (PVT) LTD**
Stanley Road, Jaffna.
077 608 0988
jsrsolar@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கராத்தே சுற்றுப் போட்டியில் யாழ். மத்திக்கு 6 பதக்கங்கள்



பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கராத்தேப் போட்டியில் பங்குபற்றிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் 3 தங்கம் மற்றும் 3 வெண்கலம் உட்பட 6 பதக்கங்களைப் பெற்றுள்ளனர். அந்த வகையில் கராத்தே சண்டைப் போட்டியில் 16 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவில் டி.தினுசாந்த தங்கப்பதக்கத்தையும், 20 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவில் ஏ.ஜே அனோஷியன் தங்கப் பதக்கத்தையும் பெற்றிருந்தனர். அத்தோடு உற்றைக் காட்டா போட்டியில் 16 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவில் டி. தினுசாந், பி. அஷ்வின் மற்றும் என். சஜித் தில்சன் ஆகியோர் மூன்றாமிடத்தைப் பெற்று 3 வெண்கலப்பதக்கங்களையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## மாகாண மட்ட கபடிப் போட்டியில் பருத்தித்துறை சென். தோமஸ் சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கபடிப் போட்டியில் பருத்தித்துறை சென் தோமஸ் ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கபடிப் போட்டி கடந்த புதன்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை சென் தோமஸ் ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து வவுனியா மடுகந்த தேசிய பாடசாலை அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். ஆட்ட நேர முடிவில் பருத்தித்துறை சென் தோமஸ் ரோமன் கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலை அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 30:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3-90)



சேர். ஜான் டால்ட் ஜூனியர் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி பி. வைஸ்ணவி 80 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கத்தையும் நீளம் பாய்தலில் இரண்டாமிடத்தையும் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளார்.

## உலக செஸ் போட்டி


## கார்ல்சனை வீழ்த்தினார் பிரக்ஞானந்தா



லாஸ் வேகாஸ் செஸ் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் நோர்வே வீரர் மேக்னஸ் கார்ல்சனை இந்திய கிராண்ட் மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தா வீழ்த்தினார்.

அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் லாஸ் வேகாஸ் செஸ் கிராண்ட்ஸ்லாம் போட்டி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று நடைபெற்ற 4ஆவது சுற்றில் பிரக்ஞானந்தாவுடன், உலக சம்பியன் பட்டத்தை 5 முறை வென்றவரான மேக்னஸ் கார்ல்சன் மோதினார். இந்தச் சுற்றில் 39ஆவது நகர்த்தலின் போது கார்ல்சனை வீழ்த்தினார் பிரக்ஞானந்தா.

இதன் மூலம் ரேபிட் செஸ் போட்டியின் புள்ளிப் பட்டியலில் பிரக்ஞானந்தா முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார். இந்தச் சுற்றின் முடிவில் பிரக்ஞானந்தா, உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்டுசட்டோரோவ், ஜவோகிர் சிந்தரோவ் ஆகியோர் தலா 4.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளனர். லீக் சுற்றுகள் முடிவடைந்த நிலையில் கால் இறுதிச் [illegible] மையும் குறிப்பிடத்தக்கது. (3)



மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரம்போட்டிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 17 வயதிற்குட்பட்ட மற்றும் 20 வயதிற்குட்பட்ட இரண்டு அணிகளும் மாகாண மட்ட சம்பியனாகித் தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கபூர்வமான சமூகத்தை உருவாக்க தனியார் கல்வி நிலையங்கள் உதவ வேண்டும்

## சர்வமதப் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை வேளைக்குப் பின்னரும் ஞாயிற்றுக் கிழமைகளில் மதியத்துக்கு முன்னரும் தனியார் பிரத்தியேக வகுப்புகளை முழுமையாக நிறுத்தி, மாணவர்கள் சமய விழுமியங்களைப் புரிந்து வழிபடவும் வாழவும் உரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருமாறு யாழ் மாவட்ட சர்வ மத பேரவையின் செயலாளர் அருட்பணி இ. ராஜ்குமார், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, விரக்தி, தற்கொலை, போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாதல், வன்முறை வாள் வெட்டு என்பன அதிகரித்துவரும் சமகால சூழ்நிலையில் ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்க சமய விழுமியங்கள் மற்றும் ஒழுக்கம் மிக்க வாழ்க்கைமுறையை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

அத்துடன் மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதும் அவசியம். விளையாட்டுக்கழகங்கள் சமூக உறவை மேம்படுத்த உரிய விளையாட்டுகளில் ஈடுபட ஊக்குவிக்கப்பட வேண்டும்.

கிராமங்களில் சமூக உருவாக்கங்களை ஏற்படுத்தி வந்த சனசமூக நிலையங்கள் தொடர்ந்து இயங்க உரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். இவை எமது சமூகத்தில் நல்ல மனிதர்கள் உருவாகுவதை உறுதி செய்யும்.

தனியார் பிரத்தியேக வகுப்புகளை, குறைந்தது தரம் 10 இற்கு உட்பட்டவர்களுக்காவது, வெள்ளி மற்றும் ஞாயிறுகளில் நிறுத்தி, நல்ல ஒரு ஆக்கபூர்வமான சமூகத்தை உருவாக்க உரிய வசதிப்படுத்தல்களை மேற்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த விடயத்தில், எமது ஒத்துழைப்பையும் உடனிருப்பையும் உறுதி செய்கிறோம் என தெரிவித்துள்ளனர். (நி-8)

# சாட்டி கடற்கரையை தூய்மைப்படுத்த நடவடிக்கை

## வேலணை பிரதேச சபை தவிசாளர் அறிவிப்பு

(அராலி)

சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்குடன் வேலணை - சாட்டி கடற்கரையோரத்தில் காணப்படும் சாதாளைகளை அப்புறப்படுத்தி,கடற்கரையை தூய்மையாக்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச சபையின் தவிசாளர் அசோக்குமார் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த நடவடிக்கையின் போது அகற்றப்படும் சாதாளைகள், தாவரங்களுக்கான சிறந்த பசளையாக பயனபடுத்தக் கூடியதாக இருப்பதால் குறித்த சாதாளையை மிகக்குறைந்த விலைக்கு பொதுமக்களிற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆடி அமாவாசை தினத்திற்கு முன்னராக குறித்த செயற்பாட்டை பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளதால் கடற்சாதாளைகளைப் பெற விரும்புவோர் வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய கட்டணங்களைச் செலுத்தி தேவையான கடற்சாதாளைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-104)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கவிதா சிவகாந்தி அவர்களின்
பாசமிகு தந்தையார்.
அமரர். கணபதிப்பிள்ளை
இரத்தினம்
அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
(1338)
ஆசிரியர் கழகம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்


# இராசிபலன்

19.07.2025
ஆடி 03, சனிக்கிழமை
நவமி பிற்பகல் 1.53 மணிவரை

பரணி பின்னிரவு 12.21 மணிவரை
சுப நேரம் 3.01-4.31 மணிவரை
இராகுகாலம் 9.01-10.31 மணிவரை


சந்திராஷ்டமம்: அத்தம், சித்திரை

வளவன்



மேஷம்

திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.



கடகம்

செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், கண்ணியமிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.



துலாம்

நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.



மகரம்

விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புகள் உண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.



ரிஷபம்

பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் வாயப்புண்டு.



சிம்மம்

மறைமுக எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், புதிய முயற்சிகளில் உற்சாகம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.



விருச்சிகம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.



கும்பம்

எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பொன்னான நாள், எடுத்த காரியங்களில் அக்கறை கூடும்.



மிதுனம்

வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பணவரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.



கன்னி

வேலைச்சுமை கூடும், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.



தனுசு

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு.



மீனம்

பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் காணும் நாள்.

வீரமும் விவேகமும் ஒருங்கே இருப்பதே சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் உள்ள தொழில் கல்வி நிலையங்களில்

# வெளி மாகாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகம்!

## ஆளுநர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

**வடக்கிலுள்ள தொழில் கல்வி நிலையங்களில் வெளி மாகாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் கல்வி கற்கின்றனர். எமது மாகாணத்தவர்கள் அதனைப் பயன்படுத்துவது மிகக்குறைவாக உள்ளது. இது மாற்றியமைக்கப்பட வேண்டும். தொழில் கல்வியின் அவசியத்தை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.**

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் இ.திருமுருகன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் வைபத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய காலத்தில் தொழிற்பயிற்சி மிக முக்கியமானது. அதன் அவசியம் இப்போது எல்லோராலும் உணரப்படுகின்றது. அரச வேலைவாய்ப்பு என்பது மட்டுப்படுத்தப்பட்ட அளவாக மாறிக்கொண்டு வருகின்ற சூழலில், தனியார் வேலைவாய்ப்பையோ அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்பையோ பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் தொழிற் கல்வி அவசியமானது. அதுவும் இவ்வாறான சான்றிதழ் கற்கை நெறிகள் உங்களுக்கு கைகொடுக்கும்.

வடக்கு மாகாணத்தில் போரால் அழிவடைந்த தொழிற்சாலைகளை மீள உருவாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த தொழிற்சாலைகள் இங்கு மீள இயங்கும்போது தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்களில் முன்னுரிமை கிடைக்கக் கூடிய சாத்தியம் இருக்கின்றது.

எதிர்காலத்தில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளாமல் தொழில்களில் ஈடுபட முடியாத நிலைமை உருவாகி வருகின்றது. எனவே, உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு இந்தத் தொழிற்கல்வியின் அவசியத்தை எடுத்துக்கூற வேண்டும்.

பாடசாலை இடைவிலகலில் பெண்களை விட ஆண்களே அதிகமாக உள்ள நிலையில், இவ்வாறான தொழிற்பயிற்சிகளைப் பெற்றுக்கொள்பவர்கள் ஆண்களை விட பெண்களே அதிகமாக உள்ளனர். எனவே, கல்வியிலிருந்து இடைவிலகும் ஆண்களை இவ்வாறான தொழிற்முயற்சிகளை நோக்கி ஈர்க்க வேண்டும் என ஆளுநர் கேட்டுக்கொண்டார். (8)



ஸ்ரீ நிர்மலன் இசையில் கீர்த்தியின் குரலில் எஸ். கவிதரன் வரிகளில், சண்டிலிப்பாய் காளியம்மன் மீது "பூமுக அழகி பூவரசி" இசைப்பாமாலை கடந்த 15ஆம் திகதி 5 ஆம் திருவிழாவன்று வெளியிடப்பட்டது. சைவப்புலவர் கந்த சத்தியதாசன் வெளியிட்டு வைக்க வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தே. சுதர்சன் முதற் பிரதியையும், சிறப்பு பிரதிகளை ஆலய நிர்வாக சபைத் தலைவர் து. ஜெசிந்தன், பொருளாளர் க. ரஜிந்தன் மற்றும் இராசேந்திரம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## போதைப்பொருளுடன் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லி போதைப் பொருளுடன் மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய மூன்று இளைஞர்களை பொலிஸார் சோதனையிட்ட போது. அவர்களிடம் இருந்து 90 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து மூவரையும் கைது செய்த பொலிஸார் அவர்களை குருநகர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)

## யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப் பாணம் அறிவுத் திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக் கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித்தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் ஆகிய அடிப்படைப் பயிற்சிகள் என்பன கற்றுத் தரப்படும்.14 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலரும் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

பயிற்சிகளைத் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள வா. வள்ளி வழங்குவார்கள். மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளார்.

## மன்ற யாகம்

(யாழ்ப்பாணம்)

மேல் மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதி பராசக்தி வார வழிபாடு மன்றம் நடத்தும் 7 ஆவது மன்ற யாகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம், கல்வியங்காடு. ஜீ.பி.எஸ் வீதியில் அமைந்துள்ள இல.156 மன்றத்தில் இடம்பெறவுள்ளது. (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 240 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 500 | 350 | 400 |
| தக்காளி | 160 | 150 | 150 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 280 | 220 | 240 |
| கோவா | 300 | 400 | 400 | 300 | 400 |
| கரட் | 450 | 450 | 500 | 400 | 400 |
| பூசணி | 100 | 160 | 120 | 100 | 150 |
| புடோல் | 100 | 150 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 200-350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 110 | 150 |
| பாகற்காய் | 500 | 600 | 600 | 500 | 400 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 90 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 280 | 300 | 240 | 300 |
| பீற்றூட் | 200 | 150 | 250 | 180 | 200 |
| கறிமிளகாய் | 500 | 650 | 600 | 500 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 | 450 | 600 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 | -- | 200 |
| கீரை – 1 பிடி | 60 | 60-120 | 80-100 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 120 | 80-150 | 140-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 400 | 400 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 80 | 80 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான வர்த்தக சலுகையை முன்மொழிந்த அமெரிக்கா

(கொழும்பு)

**இலங்கை ஏற்றுமதிகளில் 70 முதல் 80 சதவீதம் வரையிலான பொருட்கள் வரிவிலக்குடன் அமெரிக்க சந்தைக்கு அனுமதிக்கப்படலாம் என அமெரிக்கா ஒரு முக்கியமான வர்த்தக சலுகையை முன்மொழிந்துள்ளது என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**



அமெரிக்காவுடன் குறிப்பிடத்தக்க வர்த்தக பற்றாக்குறை உள்ள நாடுகள் மீது பரஸ்பர வரிகளை விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் முடிவு செய்ததைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே நடந்து வரும் வர்த்தக பேச்சுவார்த்தைகளின் போது இந்த சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

வரி இல்லாத அனுகலுக்காக பரிசீலிக்கப்பட வேண்டிய 1,161 இலங்கை ஏற்றுமதி பொருட்களின் பட்டியலை அமெரிக்கா முன்மொழிந்துள்ளதாகவும் இதில் ஆடைகள் மற்றும் விவசாயத்துறை தொடர்பான 42 பொருட்கள் போன்ற முக்கிய ஏற்றுமதிகளும் அடங்குகின்றன.

இருப்பினும் பேச்சுவார்த்தைகள் இன்னும் நடந்து கொண்டிருப்பதாலும், இராஜதந்திர நெறிமுறைகளால் நிர்வகிக்கப்படுவதாலும், இந்த கட்டத்தில் திட்டத்தின் மேலதிக தகவல்கள் பகிரங்கமாக வெளியிட முடியாது எனவும் பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (நி)

## தெஹிவளையில் துப்பாக்கிச் சூடு



(கொழும்பு)

தெஹிவளையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நேற்று பதிவாகியுள்ளது.

தெஹிவளை தொடருந்து நிலையத்திற்கு அருகில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

உந்துருளியில் பிரவேசித்த அடையாளம் தெரியாத இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் களுபோவில போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி)

## ஜனாதிபதி நிதியத்துடனான தொடர்புகளுக்கு 011-4354250

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தை தொடர்பு கொள்ள புதிய தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி நிதியத்தை 011-4354250 என்ற எண்ணின் மூலம் தொடர்பு கொள்ளலாம் என அறிவித்துள்ளது. (நி)

## புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஆசிரியர் அதிபர்கள் சங்கங்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஆசிரியர் அதிபர்கள் சங்கங்கள் இன்றும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன.

2026 முதல் செயற்படுத்தப்பட உள்ள புதிய கல்வி சீர்திருத்தங்களின்படி, வரலாறு மற்றும் அழகியல் பாடங்கள் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் அதிபர்கள் உட்பட பல தரப்பினர் கடுமையாக குற்றம் சாட்டியுள்ளதை அடுத்து கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதிய பாடத்திட்டங்கள் தொடர்பில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு விளக்கமளித்தது.

குறித்த விளக்கத்தின்படி, 10 மற்றும் 11 ஆம் தரங்களில் ஐந்து பாடங்கள் கட்டாய பாடங்களாக பட்டியலிடப்பட்டுள்ளதுடன் தேர்வுப் பாடங்களில் வரலாறு மற்றும் அழகியல் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஆசிரியர் அதிபர்கள் சங்கங்கள் நேற்றும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன. (நி)

## வெளிநாட்டு பயணிகளுக்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம்

### விமான நிலையத்திலேயே வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் வெளிநாட்டு பயணிகளுக்கு தற்காலிக சாரதி அனுமதி பத்திரங்களை விமான நிலையத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்த புதிய சேவை ஒகஸ்ட் 3ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் இதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிறப்பு கருமபீடம் ஒன்று அமைக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

தற்போது, இந்த அனுமதி பத்திரத்திற்காக வெரஹெரவில் உள்ள மோட்டார் போக்குவரத்துத்துறை அலுவலகத்துக்குச் செல்ல வேண்டிய நிலை காரணமாக ஏற்படும் சிரமம் குறித்து எதிர்மறையான கருத்துகள் எழுந்ததைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இலங்கை போக்குவரத்து சபையில் வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை ஒப்பந்த அடிப்படையில் சாரதிகள் மற்றும் நடத்துநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நாடு முழுவதும் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள 107 டிப்போக்களில் 25,000 இற்கும் மேற்பட்ட பணியாளர்களுடன் இயங்கும் பொதுப் போக்குவரத்து சேவையை வலுப்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

அதன்படி, சாரதி பணிக்கு 450 காலியிடங்கள் (ஆண்களுக்கு 425 மற்றும் பெண்களுக்கு 25) மற்றும் நடத்துநர் பணிக்கு 300 வெற்றிடங்கள் (ஆண்களுக்கு 275 மற்றும் பெண்களுக்கு 25) உள்ளன.

விண்ணப்பங்களுக்கான இறுதி திகதி 2025 ஜூலை 31 ஆகும். விண்ணப்பிக்கும் பதவி மற்றும் தொடர்புடைய மாகாணம் உறையின் மேல் இடது மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் என இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது. (நி)

## செம்மணி மனிதப் புதைகுழி; நீதிகோரி யாழில் போராட்டம்

(அராலி)

செம்மணி புதைகுழி விவகாரத்துக்கு துரித நீதி வேண்டும் என வலியுறுத்தி யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று அடையாள போராட்டம் ஒன்று அகில இலங்கை மக்கள் கட்சியால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கட்சியின் செயலாளர் ஜெயந்திரன்,

இன்று தமிழர் பிரதேசங்களில் மனித புதைகுழிகள் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டு அகழப்பட்டு என்புக் கூடுகள் நூற்றுக்கணக்கில் மீட்கப்பட்டு வருகின்றது.

இவை அனைத்தும் காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளின் உடலங்களின் எச்சங்களாகவே இருக்கும் என எண்ணத் தோன்றுகின்றது.

ஆனாலும் அவை எவற்றுக்கும் இதுவரை நியாயமோ பரிகாரங்களோ கிடைக்கவில்லை. மாறாக இழுத்தடிப்புகளும் மறைப்புகளுமே இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்றது. இதை பிரித்தானிய அரசு வழங்கிய காலத்திலேயே தமிழ் சிங்கள இனங்களுக்கிடையே அரசியல் இழுபறி இருந்து வந்தது.

ஆனாலும் அதை பிரித்தானிய அரசோ, அன்றி அன்றைய தமிழ் தலைவர்களோ கண்டுகொள்ளவில்லை.

அன்றைய தமிழ் தலைவர்களும் சிங்கள தேசம் வழங்கிய சலுகைகளுக்கு இசைவாகி கண்டுகொள்ளாதிருந்தனர்.

இந்நிலையில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு உள்ளக விசாரணை ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக இருக்கின்றது. அதே போன்று சர்வதேச விசாரணையும் வலுவிழந்து கிடக்கிறது.

அதன்படி தமிழ் மக்களின் உரிமைசார் அரசியல் பிரச்சினைக்கு பிரித்தானிய அரசு தான் தீர்வை வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார். (நி-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

### காசா தேவாலயம் மீது தாக்குதல்

➤ இருவர் உயிரிழப்பு
➤ கண்டனம் வெளியிட்டார் போப்



(காசா)
காசாவில் உள்ள ஒரே கத்தோலிக்க தேவாலயமான ஹோலி ஃபேமிலி தேவாலயத்தை இஸ்ரேல் குண்டுவீசி அழித்தது. இதில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர் மற்றும் ஆறு பேர் காயமடைந்தனர்.

பாலஸ்தீனத்தின் நிலைமை குறித்து போப் ஆண்டவருக்கு தகவல்கள் வழங்கி வந்த விகார் ஜெனரல் பாதிரியார் கேப்ரியல் ரோமானெல்லி இந்த குண்டுவீச்சில் காயமடைந்தார்.

போப் லியோ இந்தத் தாக்குதலைக் கண்டித்து, காசாவில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய அழைப்பு விடுத்தார்.

இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகள் தாக்குதல் குறித்து விசாரித்து வருவதாகக் கூறின.

தேவாலயம் அழிக்கப்பட்டதற்கு இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சகம் வருத்தம் தெரிவித்தது.

இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் 29 பேர் கொல்லப்பட்டனர்.

இதன் மூலம், காசாவில் கொல்லப்பட்ட மொத்த பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 58,500 ஐ கடந்துள்ளது. 1,39,600 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். (நி)

## நெதன்யாகுவுக்கு எ
## ரத்து செய்யுமாறு
## நிராகரித்த சர்வதே

**(நெதர்லாந்து) ●●●●●●●●●●●●●●●●**
**இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்ய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர்களிற்கு பிடியாணையை இரத்துச் செய்ய வேண்டும். கப்பட்ட பாலஸ்தீன பகுதிகளில் இடம்பெற செயல்கள் குறித்த விசாரணைகளை கைவி என்ற இஸ்ரேலின் வேண்டுகோளை சர்வதேச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.**

மே 9ஆம் திகதி இஸ்ரேல் விடுத்த வேண்டுகோளை நிராகரித்துள்ளதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன பகுதிகளில் இழைக்கப்படும் குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் இல்லை என்ற இஸ்ரேலின் வாதத்தை நிராக

## உக்ரைன் நாட்டின் புதிய பிரதமராக
## யூலியா ஸ்விரிடென்கோ நியமனம்

(கீவ்)
ரஷ்யாவுடன் போர் நீடித்து வரும் நிலையில் உக்ரைன் பிரதமர் டெனிஸ் ஷிம்ஹால் திடீரென தனது பதவியை இராஜினாமா செய்தார்.

மார்ச் 2020 முதல் பிரதமராக இருந்த டெனிஸ் ஷ்மிஹால், உக்ரைன் வரலாற்றில் மிக நீண்ட காலம் பிரதமராகப் பணியாற்றியவர் ஆவார்.

இந்நிலையில் உக்ரைனின் புதிய பிரதமராக, துணைப் பிரதமரும் பொருளாதார அமைச்சருமான யூலியா ஸ்விரிடென்கோ நேற்று முன்தினம் வியாழக்கிழமை நியமிக்கப்பட்



டுள்ளார்.

புதிய பிரதமர் யூலியா ஸ்விரிடென்கோ, உக்ரைனின் உயர்மட்ட பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை தாங்கியவர். அமெரிக்காவுடனான ஒப்பந்தத்திற்கு வழிவகுத்த பேச்சுவார்த்தைகளுக்கும் அவர் தலைமை தாங்கி

னார்.

2022 ஆம் ஆண்டு ரஷ்யாவுடனான போர் தொடங்கியதிலிருந்து பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இராணுவத் தலைவர்கள் மாற்றப்பட்டாலும், பிரதமர் மாற்றப்படுவது இதுவே முதல் முறை ஆகும். (நி)

## 4.3 மில். அமெரிக்க
## ஏலம்போன செவ்வாய்

(வோஷிங்டன்)
பூமியில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட செவ்வாய் கிரகத்தின் மிகப்பெரிய அரியவகை பாறை 4.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஏல நிகழ்வு கடந்த புதன்கிழமை சோத்பியின் நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

NWA 16788 என அழைக்கப்படும் இந்த விண்கல் பாறை 24.5 கிலோ எடையும் சுமார் 38.1 சென்றி மீற்றர் நீளமும் கொண்டது என சோத்பிஸ் தெரிவித்துள்ளது.

இந்த விண்கல் பாறை 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நைஜரின் தொலைதூரப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் செவ்வாய் கிரகத்தின் அடுத்த பெரிய பகுதியை விட 70% பெரியது என்று ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

விண்கற்கள் என்பது ஒரு சிறுகோள் அல்லது வால் நட்சத்திரம் பூமியின் வளிமண்டலத்தைக் கடந்து சென்ற பின்னர் எஞ்சியிருக்கும் பாறையின் எச்சங்கள் ஆகும்.

சிவப்பு நிற பழுப்பு நிற பாறையான இந்த விண்கல் அரியவகையானது. பூமியில் இதுவரை சுமார் 400 செவ்வாய் கிரக விண்கற்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என சோத்பியின் ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

"இது பூமியில் செவ்வாய் கிரகத்தின் மிகப்பெரிய பகுதி. இது அங்கிருந்து இங்கு வருவதற்கான வாய்ப்புகள்



வா
"பூ
சத
என்
கள்.
வி
பகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# எதிரான பிடியாணை கோரிய இஸ்ரேல் தேச நீதிமன்றம்!

ன்யாகு மற்றும்
ிற்கு எதிரான
ம். ஆக்கிரமிக்
பெறும் குற்றச்
கவிட வேண்டும்
தச குற்றவியல்




மற் றத் ன்ற ாக ரித்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அதன் முந்தைய தீர்ப்பினை மீண்டும் உறுதி செய்துள்ளது.

பாலஸ்தீனம் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கு இடமளிக்க கூடாது என்ற இஸ்ரேலின் வேண்டுகோளையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (நி)

## இஸ்ரேலுக்கான ஆயுத விநியோகத்தை தடுக்க முயல்வோம் – (கொலம்பிய மாநாட்டில் இணக்கம்)

(பொகொட்டா)

காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகளிற்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்யப் போவதாக கொலம்பியாவில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலிற்கான ஆயுத விநியோகத்தினை தடுக்கப் போவதாகவும் இந்த மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள் தெரிவித்துள்ளன.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பகுதிகளில் இஸ்ரேலின் தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கான ஆறு நடவடிக்கைகள் குறித்த இணக்கப்பாட்டுடன் கொலம்பிய மாநாடு முடிவடைந்துள்ளது.

கொலம்பிய மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள் ஹேக் குழு என அழைக்கப்படுகின்றன. இந்த குழுவில் பொலிவியா, கொலம்பியா, இந்தோனேசியா, கியூபா, ஈராக், மலேசியா உட்பட பல நாடுகள் இடம்பெற்றுள்ளன.

ஆயுதங்கள் வெடிமருந்துகள் இராணுவ எரிபொருள் தொடர்புடைய இராணுவ உபகரணங்கள் மற்றும் இரட்டை பயன்பாட்டு பொருட்களை இஸ்ரேலுக்கு வழங்குவதையோ அல்லது மாற்றுவதையோ தடுப்பது இஸ்ரேலுக்கு மேற்கூறிய பொருட்களை எடுத்துச் செல்ல கப்பல் பயன்படுத்தப்படும் அபாயம் உள்ள எந்தவொரு துறைமுகத்திலும் கப்பல்களின் போக்குவரத்து நறுக்குதல் மற்றும் சேவையைத் தடுப்பது பங்கேற்கும் நாடுகளில் கொடியிடப்பட்ட கப்பல்களில் அத்தகைய பொருட்களை கொண்டு செல்வதைத் தடுத்தல். இஸ்ரேலின் பாலஸ்தீன சட்டவிரோத ஆக்கிரமிப்பை ஆதரிப்பதிலிருந்தும் அதன் சட்டவிரோத இருப்பை நிலைநிறுத்துவதிலிருந்தும் பொது நிறுவனங்கள் மற்றும் நிதிகளைத் தடுக்க அனைத்து பொது ஒப்பந்தங்களையும் அவசரமாக மறுஆய்வு செய்யத் தொடங்குதல்.

சர்வதேச சட்டத்தின் கீழ் மிகக் கடுமையான இஸ்ரேலிய குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான கடமைகளுக்கு இணங்குதல் மற்றும் பாலஸ்தீனத்தில் செய்யப்படும் சர்வதேச குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதற்கான தேசிய சட்டக்கட்டமைப்புகள் மற்றும் நீதித்துறைகளில் உலகளாவிய அதிகார வரம்பு கட்டளைகளை ஆதரித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக கொலம்பிய மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள் தெரிவித்துள்ளன. (நி)

# ...க்க டொலர்களுக்கு ...ாய்க் கிரகத்தின் பாறை



வானியல் ரீதியாக மிகக் குறைவு". "பூமியின் மேற்பரப்பு சுமார் 70 சதவீதம் நீரால் சூழப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எனவே இது கடலின் நடுவில் விழாமல் வரட்சியான தரைப் பகுதியில் விழுந்துள்ளமையினால் எம்மால் இதனை காணக் கிடைத்தது அதிஷ்டமே என சோத்பிஸின் அறிவியல் மற்றும் இயற்கை வரலாற்றுத் துணைத் தலைவர் கசாண்ட்ரா ஹாட்டன் தெரிவித்துள்ளார். (நி)

# பாகிஸ்தானை தளமாகக் கொண்ட தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட்

## பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது அமெரிக்கா

(வோஷிங்டன்)


கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு சுற்றுலாத் தலத்தில் 4 பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டு தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானைத் தளமாக கொண்டு இயங்கும் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் பொறுப்பேற்றது.

இந்நிலையில் தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் அமைப்பை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ வெளியிட்டுள்ள அறிக்கையில், "வெளியுறவுத்துறை, தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் ஐ ஒரு வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பாகவும், (லஷ்கர் தொய்பாவால்) நியமிக்கப்பட்ட உலகளாவிய பயங்கரவாதியாகவும் அறிவிக்கிறது" என்று தெரிவித்துள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பிராணி வளர்ப்பு
# பார்வோ எனும் நாய்க்குட்டிகளின் காலன்

## கால்நடை வளர்ப்பு - பகுதி - 01



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

உலகெங்கிலும் நாய்களில் குறிப்பாக நாய்க் குட்டிகளில் parvo என்னும் இரத்தக் கழிச்சல் நோய் அதிகளவு உயிரிழப்பை ஏற்படுத்துகிறது. இலத்தீன் மொழியில் பார்வோ என்றால் நுண்ணிய என்று பொருள். 20 நானோ மீற்றர் அளவேயான மிகச் சிறிய DNA வைரசான பார்வோ [Canine parvo virus 2- CPV2] ஆறு வாரம் முதல் ஆறு மாதம் வரையான வயதுடைய நாய்க் குட்டிகளை அதிகமாகத் தாக்கும். அதேவேளை நடைமுறையில் ஆறு வாரத்துக்கும் குறைவான மற்றும் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட நாய்களையும் பாதிப்பதை அவதானிக்க முடிகிறது. முறையான தடுப்பூசிகளை சரியான நேரத்தில் செலுத்தாத நாய்க் குட்டிகள் பார்வோ தொற்றுக்கு உள்ளாகுவதோடு நோய் வந்த பின் முறையான சிகிச்சை செய்யப்படாத மற்றும் சிகிச்சைகள் பெறப்படாத நாய்கள் அதிகளவு இறக்கின்றன.

1970களில் அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் பூனைகளுக்கு ஏற்படும் Feline panleukopenia வைரஸினை ஒத்த பார்வோ வைரஸ் நோய் கண்டறியப்பட்டது. அதன் தொடர்ச்சியாக உலகெங்கிலும் பல இடங்களில் மரபணு ரீதியில் வேறுபட்ட பார்வோ நோய் நிலைகள் [variants] அவதானிக்கப்பட்டிருந்தன.[CPV2a,CPV2b, CPV2c]

இந்த நோயை பொறுத்த வரையில் இரண்டு வகைகள் உள்ளன

1.குடலினை /உணவு கால்வாய் தொகுதியை பாதிக்கும் வகை [intestinal form]

2.இதயத்தை பாதிக்கும் வகை. [Cardiac form]


குடலினை அல்லது உணவு கால்வாயை பாதிக்கும் வகைதான் பொதுவாக உலகெங்கிலும் காணப்படுகிறது. நோய் தொற்றுடனான கழிவுகளை உண்ணும் நாய்களில் இந்த வைரஸ் தொற்றிக் கொள்வதுடன் தொண்டைப் பகுதியின் நிணநீர் கணுக்களில் பெருகி இரத்தத்தில் கலக்கிறது. நிணநீர் கணுக்கள்,என்பு மச்சை மற்றும் மிக விரைவாக பிரிவடையும் சிறுகுடல் பகுதிகளிலும் இந்த வைரஸ் தாக்குகிறது. சிறுகுடல் பகுதியில் காயங்கள் ஏற்படுவதுடன் வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகளும் தோன்றுகின்றன. என்பு மச்சை பாதிப்படைவதால் குருதி அணுக்களின் உற்பத்தியும் பாதிப்படைகிறது.

காயங்கள் மற்றும் குருதி அணுக்களின் அளவு குறைவதால் காற்று மற்றும் காற்றின்றி வாழும் நுண்ணுயிர்களும் பெருகி நிலையை மோசமாக்குகின்றன. தொடர்ச்சியான அதிகளவு வாந்தி வயிற்றோட்டம் காரணமாக நீர் இழப்பு [dehydration/ hypovolemic shock] ஏற்பட்டு மரணம் சம்பவிக்கிறது. அதிக புரத [hypo protenemia] மற்றும் எரி சக்தி [hypo glycaemia]இழப்பும் ஏற்படுகிறது.

இதயத்தை பாதிக்கும் நோய்த் தொற்று மிக குறைவாகவே அவதானிக்கபடுகிறது. தாயின் கருப்பையில் இருந்து இந்த தொற்று ஏற்படுகிறது. பிறந்தது முதல் எட்டு வாரங்களில் இந்த நிலை ஏற்படுகிறது. மிக விரைவாக பிரிகையடையும் இதய தசைகள் பாதிக்கப்பட்டு [heart failure] குட்டிகள் இறக்கின்றன.

இலங்கையைப் பொறுத்த வரை விட்டு விட்டு பெய்யும் மழைக் காலங்களில் குறிப்பாக வடக்கு கிழக்கில் ஏப்ரல், மே, யூன், யூலை மாதங்களில் இந்த நோயின் தாக்கத்தை அவதானிக்க முடிகிறது. நாட்டின் ஏனைய பகுதிகளில் வருடத்தின் ஆரம்பத்திலேயே இந்த நோய் நிலையை அதாவது ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் அவதானிக்க முடிகிறது. அண்மைய நாட்களில் நாட்டின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு நாய்க் குட்டிகளை அதிகளவில் கொண்டு வந்து பலர் விற்பதால் இந்த நோய் மிக விரைவாக காலம் கடந்தும் பரவலடைகிறது.

இந்த நோய் பொதுவாக வெளிநாட்டு இன நாய்களையே அதிகளவு பாதிக்கின்ற அதேவேளை அண்மைக் காலமாக நாட்டு இன நாய்களையும் பாதிப்பதை காண முடிகிறது.நோய் ஏற்படும் காலத்தில் தடுப்பூசி செலுத்தப்படாத குறித்த வயதுப் பருவத்துக்குள் வரும் நாய்கள் பார்வோ ஆபத்தை எதிர் கொள்கின்றன. நான் மேலே சொன்ன உயர் வகை வெளிநாட்டு நாய்களை சிகிச்சையளிப்பது மிகக் கடினம். அவை தப்பும் விகிதமும் மிகக் குறைவு. ஓரளவு வயதான உள்ளூர் நாய்க்குட்டிகள் சிகிச்சையின் பின் சரியாகின்றன.அவற்றின் குணமடையும் விகிதம் மிக அதிகம். நான் முன்பு கூறியது போல பெரும்பாலும் சிறிய நாய்களை பாதிக்கின்ற இந்த நோயில் நோய் பாதித்த சிறிய நாய்களுடன் இருக்கும் தடுப்பூசி போடப்படாத பெரிய நாய்களும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. குறித்த பகுதியில் ஏற்பட்டுள்ள வைரஸ் வகை, நாயின் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் ஏனைய சமாந்தரமான நோய்கள் (உண்ணிக் காய்ச்சல் காரணி) களின் அடிப்படையில் இந்த நோயின் தீவிரத் தன்மை வேறுபடுகிறது. இந்த நோய் நாய்களை மட்டுமின்றி நரி, ஓநாய்களையும் பாதிக்கின்றது.




பார்வோ நோயுள்ள ஒரு நாயிலிருந்து இன்னொரு நாய்க்கு அவற்றின் கழிவுகளை உட்கொள்வதன் மூலம் [ Fecal – oral route]. நோய் உள்ள நாய்களை தொட்ட நபர்களின் உடைகள், காலணிகள் மூலமும் நாய்குட்டிகள் விற்கும் இடங்கள். சரியாக பராமரிக்கப்படாத கால்நடை வைத்திய நிலையங்கள் மூலம் விரைவாகப் பரவலடைகிறன. அண்மைக் காலங்களில் இலங்கையில் அதிகரித்துள்ள petshops எனும் நாய்க்குட்டி விற்கும் கடைகளில் சரியான தடுப்பூசி தகவல்கள் இல்லாத இடங்களில் இருந்து குட்டிகளை கொண்டு வந்து விற்பதை காண முடிகிறது. பல நாய்க்குட்டிகள் ஒரு இடத்தில் வைத்திருக்கும் போது மிக இலகுவாக தொற்று ஏற்படுகிறது.

சில வேளைகளில் வீட்டில் ஒன்றாக வளர்க்கப்படும் நாய்களில் ஒன்றுக்கு வெளிப்படையாக தொற்று ஏற்பட்டிருக்கும் அல்லது இறந்திருக்கும், ஏனைய குட்டிகள் அறிகுறிகளை வெளிப்படுத்தாது [sub clinical] இருக்கலாம். இந்த நிலையில் நாய்களைக் கொண்டு வந்து வைத்தியருக்கு எதுவுமே சொல்லாது தடுப்பூசி போடுவார்கள்.

அதுபோல சில நாய்கள் ஆரம்பத்தில் சிறிது சிறிதாக நோய் அறிகுறிகளைக் காட்டும். அதனையும் மறைத்து அவசர அவசரமாக தடுப் பூசியை போடுவார்கள்.

இதன் காரணமாக நாய்கள் ஓரிரு நாட்களில் நோய் அறிகுறியை கடுமையாகக் காட்டும். அப்படியான நாய்களின் உயிரை காப்பாற்றுவது சிரமமாக இருக்கும். கட்டாயம் கால்நடை வைத்தியரிடம் மேற்படி [illegible] நோய்த் தொற்றுக்கு உள்ளாகியதைச் சொல்ல வேண்டும்.

நாய்க்குட்டிகளை விற்பவர்கள் மிகக் குறைந்த நாட்களில் அதாவது ஒரு மாத வயதுக்கும் குறைந்த குட்டிகளை மொத்தமாக கொள்வனவு செய்து மக்களிடம் விற்று விடுவார்கள். தாயிடம் சரியாக தாய்ப்பாலை அருந்தாத அந்த குட்டிகளிடம் சரியான நோய் எதிர்ப்பு சக்தி [Immunity] கிடைத்திருக்காது. அவை இலகுவில் நோய்த் தொற்றுக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளவை. அத்துடன் ஒரு மாத வயதுக்குள் சிலர் அவற்றுக்கு முதல் பார்வோ தடுப்பூசியையும் போட்டு விடுகிறார்கள்.

இது மிக ஆபத்தானது. சரியாக தடுப்பூசி செலுத்தப்பட்ட தாய் நாயிடம் இருந்து கிடைக்கும் பிறபொருள் எதிரிகள் [Maternal antibodies] அந்த குட்டிகளில் அதிகளவில் ஆறு வாரம் வரை காணப்படுவதால் மிக குறைந்த காலத்தில் தடுப்பூசி செலுத்தப்படும் போது அந்த பிறபொருள் எதிரிகள் தடுப்பூசியை செயலிழக்கச் செய்து விடும். [neutralization] இதனால் எந்த நோய் எதிர் சக்தியும் இல்லாது புதிய பார்வோ தொற்று ஏற்படும் வேளையில் நாய்கள் பாதிப்படைகின்றன. .மிக குறைந்த அளவு வயதில் ஏற்றும் தடுப்பு மருந்துகள் சில இடங்களில் கிடைக்கின்றன. அதாவது தாயின் பிற பொருள் எதிரிகளை அந்த தடுப்பூசிகள் இடையூறு செய்ய மாட்டாது. அண்மையில் கொரோனா காலத்தில் மக்களின் செல்லப் பிராணி வளர்ப்பு மோகம் அதிகரித்ததைப் பயன்படுத்தும் நாய் குட்டிகளை விற்கும் கடைக் காரர்கள் அதிக விலை வைத்து குட்டிகளை விற்கின்ற போதும் சரியான தடுப்பூசிகளைச் சரியான வயதில் செலுத்தச் சொல்வதில்லை அல்லது தாங்களே தரம் குறைந்த மருந்துகளைச் சட்ட விரோதமாக பெற்று செலுத்தியும் விடுகின்றனர். இது மேலும் நோய் நிலையை அதிகரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல தென்னிந்தியப் பாடகர் ஸ்ரீனிவாஸ் யாழ் வருகை




(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய பிரபல பாடகர் ஸ்ரீனிவாஸ் பங்குபெறும் இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இன்று சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு இடம்பெறவுள்ள நிலையில், ஸ்ரீனிவாஸ் தலைமையில் தென்னிந்தியப் பாடகர்கள், இசைக் கலைஞர்கள் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

அதன் போது, யாழ்ப்பாணத்தில் அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் போக்குவரத்து வசதிகளுக்காக பேருந்து ஒன்றை கொள்வனவு செய்வதற்கான நிதியைத் திரட்டும் முகமாக குறித்த இசைநிகழ்ச்சி யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு ஒரு களியாட்ட நிகழ்வாக அல்லாமல் மருத்துவ பீட மாணவர்களையும் மருத்துவ சமூகத்தையும் மேம்படுத்தும் ஒரு நிகழ்வாக இது காணப்படும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-33-104)



# 15 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி மற்றும் ஜூலை 1 ஆம் திகதி அதிகாலை இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடல் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இரண்டு இந்திய இழுவைப் படகுகளையும் அதிலிருந்து 15 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

பின்னர் குறித்த மீனவர்களையும், இழுவைப் படகுகளையும் கடற்படையினர் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (8-285)

## கூட்டுப்பொறுப்பு-கூட்டு முயற்சி ஊடாகவே

# நகரை கட்டியெழுப்ப முடியும்

## சாவகச்சேரி நகரசபை தவிசாளர்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சிசபைகளும் - அரச இயந்திரமும் நட்புறவோடு இயங்கினால் மாத்திரமே வினைத்திறனான சேவையை ஆற்ற முடியும் என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற இரண்டாவது அமர்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அரச உத்தியோகத்தர்களுடைய ஒத்துழைப்பு கிடைத்தால் மாத்திரமே மக்களுக்கு திறமான சேவையை வழங்க இயலும்.

அரச இயந்திரத்தில் சில கோளாறுகள், பின்னடைவுகள் காணப்படும் பட்சத்தில் உரிய ஆலோசனைகளை வழங்கி சேவையை முன்னெடுத்துச் செல்ல தயாராக இருக்கின்றோம்.

கடந்த இரண்டு வருடங்கள் சபைகள் இருந்திருக்கவில்லை. அந்த இடைவேளைக்குள் சிறிய தொய்வுநிலை ஏற்பட்டு விட்டது.

அதனை சீர்செய்து சபையை முன்னோக்கிக் கொண்டு செல்ல சபை உறுப்பினர்களால் தான் இயலும்.

அரச அதிகாரிகளை நாம் அதிகாரம் செய்ய முடியாது. ஆனால் எமது ஆலோசனைகளையும் வேண்டுகோளையும் தெரிவிக்க முடியும்.

எனவே கூட்டுப் பொறுப்பு-கூட்டு முயற்சி ஊடாகவே நகரை கட்டியெழுப்ப முடியும்.

சபைத் தீர்மானங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஆளுநர் வரை கொண்டு செல்ல வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

எனவே அனைத்து தரப்பினரையும் அனுசரித்துச் சென்றால் மாத்திரமே எமது இலட்சியத்தில் வெற்றிபெற முடியும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (8-30)

# வவுனியாவில் பண்பாட்டு ஊர்திப்பவனி



(வவுனியா)

வவுனியா பிரதேச செயலகம் மற்றும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில் வவுனியா பிரதேச கலாசார பேரவையும், பிரதேச கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய பண்பாட்டு ஊர்திப் பவனி பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் பிரதேச செயலக முன்றில் நேற்று ஆரம்பமாகியது.

வவுனியா பிரதேச செயலக முன்றில் இருந்து ஆரம்பமாகிய ஊர்திப் பவனி தமிழர் பாரம்பரியம், கலாசாரம், வரலாறு, தொல்லியல், கலைகள் என்பவற்றை பறைசாற்றி கிராம மக்களின் பங்களிப்புடன் வவுனியா, கண்டி வீதியை அடைந்து பசார் வீதி, மணிக்கூட்டு கோபுர சந்தி, புகையிரத நிலைய வீதி, குருமன்காடு, மன்னார் வீதி ஊடாக சென்று பிரதேச செயலகம் முன்பாக நிறைவடைந்தது.

இதில் தமிழர் வாழ்வியலின் பாரம்பரியத்துடன் தொடர்புடைய விவசாய முறைகள், நீர்ப்பாசன முறைகள், உணவு தயாரித்தல், கைவினை உற்பத்திகள், வழிபாட்டு முறைகள், சடங்கு முறைகள், கிராமிய கலை மரபுகள், கிராமிய உணவுப் பழக்கவழக்கம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை தாங்கிய 47 இற்கும் மேற்பட்ட ஊர்திகள் இதன் போது பவனி வந்திருந்தன.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், வவுனியா அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், வவுனியா தெற்கு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் அமலராஜ், அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், மதகுருமார், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமயம் சார் அமைப்புக்கள், கிராமிய மக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டதுடன் வீதிகளில் பொது மக்களும் அதனைப் பார்த்து உற்சாகப்படுத்தினர். (8-250)



குருநகர் புனித யாகப்பர் ஆலய திருவிழா 16 ஆம் திகதி புதன்கிழமை அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படம்: ஏஜெஸ்ற்)

# தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு விரைவில் தீர்வு-கடற்றொழில் அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதிக்கு நேற்று முன்தினம் மாலை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் உள்ளிட்டவர்கள் களவிஜயம் மேற்கொண்டு களநிலைமைகளை ஆராய்ந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களும் நேற்று முன்தினம் மாலை தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதிக்கு சென்றிருந்தனர்.

தனித்தனி விஜயத்தினை மேற்கொண்டிருந்த இரு குழுவினரும் அதேவேளை விகாரை வளாகத்தில் சந்தித்து, பல முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது குறித்த பகுதியில் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக கிடங்கு வெட்டப்பட்டிருந்த நிலை காணப்பட்டதாக வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவித்துள்ளார். இதன்போது கருத்து தெரிவித்த சந்திரசேகர் "தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்," என உறுதியளித்தார். (8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 825





"இந்த பிரம்மாண்டமான அரண்மனையில் நானும் என் சிநேகிதர்களும் தங்குவதற்கு எந்த இடத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்?" என்று கேட்டான் கரிகாலன்.

"ஐயா! தங்களுக்கும் பழுவூர் மன்னருக்கும் பின்கட்டில் விருந்தினர் விடுதி முழுவதையும் ஒதுக்கி விட்டிருக்கிறோம். மற்றப்படி வரக்கூடிய சிற்றரசர்களை எல்லாம் என்னோடு முன் கட்டிலிலேயே வைத்துக் கொள்வேன்"

"ஓகோ! இன்னும் சிற்றரசர்களும் வரப் போகிறார்களா?"

"ஆம், இளவரசே! தங்களை இங்கே சந்திப்பதற்குச் சுற்றுப்புறமுள்ள குறுநில மன்னர்கள் எல்லாரும் ஆவலாயிருக்கிறார்கள், பலரும் வருவார்கள்."

"வரட்டும், வரட்டும்! எல்லாரும் வரட்டும்! ரொம்ப நல்லது. யோசித்து முடிவு செய்ய வேண்டியதை ஒரு வழியாக முடிவு செய்து விடலாம். மதுராந்தகனுடைய சதியாலோசனை ஒருபுறம் இருக்கட்டும். நானே உங்களுடன் சேர்ந்து ஒரு சதியாலோசனை செய்ய விரும்புகிறேன். அதற்கு இந்த மாளிகையைக் காட்டிலும் தகுந்த இடம் கிடைக்காது!" என்றான் கரிகாலன்.

### 17 ஆம் அத்தியாயம்
### பூங்குழலியின் ஆசை

நாகைப்பட்டினத்திலிருந்து கோடிக்கரை வரையில் சென்ற ஓடையில் பூங்குழலியின் படகு போய்க் கொண்டிருந்தது. பூங்குழலியோடு சேந்தன் அமுதனும் அப்படகில் இருந்தான். படகு கோடிக் கரையை நெருங்கிக் கொண்டிருந்தது. ஓடைக் கரையில் தங்க நிறத் தாழம்பூக்கள் மடல் விரித்து மணத்தை அள்ளி எங்கும் வீசிக் கொண்டிருந்தன. ஒரு தாழம்பூவின் மீது பச்சைக்கிளி பறந்து வந்து உட்கார்ந்தது. அது உட்காந்த வேகத்தில், தாழம்பூ ஊஞ்சல் ஆடுவது போல் ஆடியது. பச்சைக்கிளியும் அத்துடன் ஆடி விட்டுப் பிறகு அதன் தங்க நிற மடலைத் தன் பவள நிற மூக்கினால் கொத்தியது.

படகு நெருங்கியதும், பச்சைக்கிளி, 'கிக்கி, கிக்கி' என்று கத்திக் கொண்டு பறந்தோடி விட்டது.

"பிறந்தால் பச்சைக் கிளியாகப் பிறக்க வேண்டும்!" என்றாள் பூங்குழலி.

"நீ அவ்விதம் எண்ணுகிறாய்! அதற்கு எத்தனை கவலையோ, எவ்வளவு கஷ்டமோ, யார் கண்டது?" என்றான் சேந்தன் அமுதன்.

"என்ன கவலை, கஷ்டம் இருந்தாலும் இஷ்டம் போல் எல்லையற்ற வானத்தில் பறந்து செல்ல முடிகிறதல்லவா? அதைக் காட்டிலும் இன்பம் வேறு உண்டா?" என்றாள் பூங்குழலி.

"அப்படிப் பறந்து திரியும் பச்சைக்கிளியைச் சிலர் பிடித்துக் கூண்டில் அடைத்து விடுகிறார்களே!" என்றான் சேந்தன் அமுதன்.

"ஆமாம், ஆமாம்! அரண்மனைகளில் வாழும் இராஜகுமாரிகள் பச்சைக்கிளிகளைக் கூண்டுக்குள் அடைத்து வைக்கிறார்கள்! குரூரராட்சஸிகள்! கிளிகளைக் கூண்டில் அடைத்துவிட்டு அவற்றுடன் கொஞ்சி விளையாடுகிறார்கள். நான் மட்டும் ஏதேனும் ஓர் அரண்மனைகளில் சேடிப் பெண்ணாயிருந்தால், கூண்டில் அடைபட்ட கிளிகளுக்கு விஷம் வைத்துக் கொன்று விடுவேன்.

கிளிகளைப் பிடித்துக் கூண்டில் அடைக்கும் இராஜகுமாரிகளுக்கும் விஷத்தைக் கொடுத்து விடுவேன்"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## உயிரைக்காப்பாற்றிய வைத்தியம்



மான் குட்டி சுந்தருக்கு படிக்க வேண்டும் என்று ஆசை, ஆனால் அம்மா ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள். அதனால் தினமும் பள்ளிக்கூடத்தைத் தாண்டி செல்லும் போதெல்லாம், பள்ளியை ஏக்கத்துடன் பார்ப்பான்.

அங்கு குட்டிக் குரங்குகள், பூனைகள், நாய், நரி, ஓநாய், குட்டிகள் போன்றவைகளெல்லாம் சந்தோசமாய் பள்ளிக்கு செல்லும் போது தான் மட்டும் அம்மாவுடன் எப்பொழுதும் புல்லை மேய்ந்து கொண்டிருப்பது மான் குட்டி சுந்தருக்குக் கவலையாக இருந்தது. அம்மாவிடம் அழுது ஆர்ப்பாட்டம் செய்தது. அம்மா அதெல்லாம் நமக்கு வேண்டாம். நாம் இவர்களுடன் கலந்து கொண்டால் என்றாவது ஒரு நாள் உன்னை சாப்பிட்டு விடுவார்கள் என்று பயமுறுத்தியது.

மான் குட்டி சுந்தருக்கு இதனால் வருத்தம் பெருகிக் கொண்டே வந்தது. அந்தப் பள்ளியை நடத்திக் கொண்டிருந்தது கரடியார். அவர் தினமும் பள்ளிக்கு வந்து மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார். அந்த பள்ளிக்கு ஆசிரியர்களாக, யானையாரும், ஓநாயும், இருந்தன. அவைகள் மிகுந்த கண்டிப்பானவைகள். அதனால் குரங்கு குட்டிகள் கூட தன் வாலைச் சுருட்டி வைத்து அடக்கமாய் இருந்தன.

ஒரு நாள் எதேச்சையாக கரடியாரை மான்குட்டி சுந்தர் சந்தித்தது. அது தான் படிக்க வேண்டும் என்ற ஆசையைக் கரடியாரிடம் சொன்னது, கரடியாரும் நாளையில் இருந்து பள்ளிக்கு வா என்று சொன்னது, அம்மா என்னை அனுப்ப மறுக்கிறாள் என்று கரடியாரிடம் சொல்ல, கரடியாரும் நான் உன் அம்மாவிடம் பேசுகிறேன் என்றது.

அது போல் மறுநாள் கரடியார் அம்மா மானைச் சந்தித்து இந்தக் காலத்தில் படிப்பு என்பது எவ்வளவு அவசியம் என்பதை எடுத்துச் சொன்னது. அம்மா மான் ஆரம்பத்தில் ஒத்துக் கொள்ளவில்லை, காரணம் கேட்டதற்கு, படித்துக் கொண்டிருப்பவைகள் எல்லாம் மாமிச உண்ணிகள், அப்படியிருக்க என் குழந்தையை எப்படி நம்பி அனுப்புவது என்று சொன்னது.

அதைக் கேட்ட கரடி அப்படியானால் யானை எப்படி அவர்களுக்கு பாடம் எடுக்கிறது? என்று கேட்டது. அம்மா மான் யானை மிகப் பெரிய விலங்கு, அது மட்டுமல்லாமல் மிகுந்த பலசாலி கூட, அதனால் எல்லா மிருகங்களும் அதற்கு பயப்பட்டு ஒழுங்காக இருக்கின்றன. என்றது. கரடியார் அந்த யானையையே உன் மான் குட்டிக்கு பாதுகாப்பாக இருக்க சொல்லுகிறேன், என்ன சொல்லுகிறாய் என்று கேட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கௌரவத்தைப் பெற்று விடுவது பெரிதன்று, அதற்குத் தகுதியுள்ளவனாக இருப்பது தான் முக்கியம்
– அரிஸ்டோட்டில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் மக்களுக்கு செய்த துரோகம்

ஒரு நல்ல ஆரம்பம் அரைவாசி வெற்றி என்கிறது ஓர் ஆங்கிலப் பழமொழி.

ஆம், எந்த விடயமாயினும் அதன் ஆரம்பம் என்பது சிறப்பாக அமையும்போது தான் அதன் இறுதி இலக்கு பூரணத்துவமான வெற்றியைத் தரும்.

ஆனால் எங்கள் தமிழர் பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் ஆரம்பமென்பது கேலிக்கூத்தாக இருப்பதுதான் வேதனைக்குரியது.

ஆம், உள்ளூராட்சி சபைகளான பிரதேச, பட்டின, நகர, மாநகர சபைகளின் கூட்டங்களைப் பார்க்கும்போது அங்கு கணிசமான உறுப்பினர்கள் பொறுப்பற்றவர்களாக நடந்து கொள்வதை அவதானிக்க முடியும்.

அதிலும் சில உறுப்பினர்கள் தாங்கள் நினைப்பதையெல்லாம் அந்த உயர் சபைகளில் கூறி விடலாம் என எண்ணுகின்றனர்.

இதையும் கடந்து சபைக் கூட்டங்கள் சண்டை சச்சரவாக நடந்து முடிவதையும் காண முடிகிறது.

ஏகப்பட்ட பணச் செலவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தி, கணிசமான அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டு, வாக்களிப்பு நிலையங்கள் அமையப் பெற்று வாக்காளப் பெருமக்கள் தங்களின் பொன்னான நேரத்தைச் செலவிட்டு வாக்களித்து, வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில்,

தெரிவு செய்யப்பட்ட சபைகள் கூடுகின்ற போது, அவை எத்துணை பெறுமதியோடு – அபிவிருத்தித் திட்டங்களை மிகவும் உணர்வு பூர்வமாகவும் நேர்த்தியாகவும் ஆராய்ந்து அவற்றை அமுல்படுத்துகின்ற கருமத்தை ஆற்ற வேண்டும்.

சபையின் தவிசாளர் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் கோவைகளுடன் இருந்து குறித்த திட்டங்களை பரிசீலிக்க வேண்டும்.

இதுவே சபைக் கூட்டத்தின் இலட்சணமாகும்.

ஆனால் எங்கள் வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் கணிசமான சபைகளின் (எல்லா சபைகளும் அல்ல) கூட்டங்கள் இங்கிதமில்லாமல் நடந்தாகின்றன.

இங்குதான் இதற்கான காரணம் என்ன என்று ஆராயும்போது, பொருத்தமற்றவர்களை வேட்பாளர்களாக நியமித்து, அவர்களை உறுப் பினர்களாக்கிவிட அவர்கள் சபைக் கூட்டங் களில் சன்னதமாடுகின்றனர்.

ஒரு காலத்தில் எத்துணை உயர்வாளர்களால் நிறைந்திருந்த எங்கள் உள்ளூராட்சி சபைகள் இப்போது எப்படி இருக்கின்றன என்பதை சம்பந்தப்பட்ட தமிழ்க் கட்சிகள் கண்டு கொண்டு தான் இருக்கின்றன.

என்ன செய்வது பொருத்தமற்ற உறுப்பினர்களை வேட்பாளர்களாக்கி, அவர்களை வெற்றி பெறச் செய்து சபைகளை சின்னாபின்னமாக்கிய தமிழ் அரசியல் கட்சிகள்; தமிழ் மக்களுக்குச் செய்த பெருந்துரோகம் இதுவாகும்.

இதற்கான தண்டனையை அவர்கள் பெற்றே தீருவார்கள்.

# உள நெருக்கடியிலிருந்து மாணவர்களை பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பு

## யாழ்.மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன்

(யாழ்ப்பாணம்)

உள நெருக்கடியிலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பாகும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர் தூதுவர் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சி செயலமர்வு,

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று (18) யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், இச் செயலமர்வின் நோக்கமானது பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விளங்கி அவர்களை எவ்வாறு ஆற்றுப்படுத்துவது என்றும், அவர்களை உள நெருக்கடிகளிலிருந்து எவ்வாறு பாதுகாத்தல் என்றும் குறிப்பிட்டு, மாணவர்களை உள நெருக்கடியிலிருந்து பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

மேலும் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களை எவ்வாறு கையாள்வது என்பதிலும் சூழலை ஆரோக்கியமாகப் பேணுவதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இச் செயலமர்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் உள மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய ஆணையாளர் ரி.கனகராஜ் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் இ.ரவிராஜ் வளவாளர்களாக கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினர்.

இச் செயலமர்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ம-7,33)

# மருந்தகங்களில் தகுதி வாய்ந்த மருந்தாளர்கள் தேவை - சஜித்

(கொழும்பு)

மருந்தகங்களில் தகுதிவாய்ந்த மருந்தாளுநர்களால் மருந்துகள் வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

தனியார் மருந்தக உரிமையாளர்களுடனான நேற்றைய சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரச வைத்தியசாலைகளிலும் மருந்தாளுநர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் இலங்கையில் உள்ள 5,000 மருந்தகங்களில் பெரும்பாலானவற்றில் மருந்தாளுநர்கள் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக மருந்தகங்களை மூடுவது அல்லது மருந்து வழங்கலை தன்னிச்சையாக முன்னெடுப்பது பொருத்தமான பதிலாக அமையாது எனவும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் வீதிப் போராட்டங்களில் ஈடுபட வேண்டாம் எனவும் அவர் கோரினார்.

மாறாக காலக்கெடுவுடன் கூடிய திட்டமொன்றை உருவாக்கி, தகுதிவாய்ந்த மருந்தாளுநர்களை நியமிக்கும் வரை முறையான செயற்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

மேலும், இதுதொடர்பாக பாராளுமன்றத்தில் வேலைத்திட்டமொன்றை சமர்ப்பிப்பதாகவும் மருந்துகளை ஒழுங்கற்ற முறையில் வழங்குவது தவறு எனவும் அவர் வலியுறுத்தினார். (ம-7)

# வவுனியா - கூமாங்குளத்தில் இடம்பெற்ற வன்முறை

## மேலும் ஐவர் பொலிஸாரால் கைது

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் மேலும் 5 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டர் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில் விழுந்து மரணமடைந்திருந்தார்.

இதன்போது அப்பகுதியில் பயணித்த போக்குவரத்து பொலிஸாரே குறித்த மரணத்திற்கு காரணம் எனத் தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

மரணம் தொடர்பில் விசாரணை செய்யச் சென்ற பொலிஸார் மீது அப்பகுதியில் குழுமி இருந்தவர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் அதில் 5 பொலிஸார் காயமடைந்ததுடன் பொலிஸாரின் இரு மோட்டர் சைக்கிள்கள் மற்றும் கப் ரக வாகனம் ஒன்றும் சேதமாக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் அரச சொத்துக்களை சேதப்படுத்தியமை, மக்களை ஒன்று கூட்டியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறை ஏற்படுத்தியமை, இறப்புக்குக் காரணமாக இருந்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து மேலும் 5 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

# மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(அம்பாறை)

அம்பாறை - உஹன கலஹிடியாகொட கிராமத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த புதன்கிழமை (16) இரவு இடம்பெற்றுள்ளது.

கலஹிடியாகொட கிராமத்தில் உள்ள பூசணிக்காய் தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கியே உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

மின்சாரம் தாக்கிய நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து உஹன பொலிஸ்நிலைய அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து பூசணிக்காய் பயிரிடப்பட்ட நிலத்திற்கு சட்டவிரோதமாக மின்சாரம் இணைத்த நபரைக் கைது செய்துள்ளனர். (ம-7)

# புகையிரதம் மோதியதில் காட்டு யானை உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயில் மோதி காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து நேற்று கல்லெல்லப் பகுதியில் அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த யானை அதிகாலை 3 மணி முதல் கிராமத்தில் சுற்றித் திரிந்து அப்பகுதியிலுள்ள நெல் வயல்களுக்குள் நுழைவது வழக்கமாகக் கொண்டிருந்துள்ளது.

நேற்றையதினம் யானை வந்தபோது வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்த போதிலும், ஆனால் அந்நேரத்தில் அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள முடியவில்லை எனக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 17

சொக்கன்

அவருடைய கை, கால்கள் அசையாதபடி சங்கிலியில் இறுகக் கட்டப்பட்டன. பிறகு அந்த அறை பூட்டப்பட்டது.

என் அனுமதி இல்லாமல் யாரும் இந்த ரூமைத் திறக்கக்கூடாது என்றார் ரஃபி எய்டன். அந்தாள் ராத்திரி முழுக்கத் தனிமையில கண்டதையும் கற்பனை பண்ணிக் கவலைப்படணும் நாம எப்ப வருவோமோ அடுத்து என்ன செய்வோமோ என்று யோச்சித்து நடுங்க வேண்டும். இனிமே நம்ம கதி அவ்வளவுதான் என்று எல்லா நம்பிக்கையையும் மொத்தமா இழக்க வேண்டும். அதன் பின்பு நம்ம வேலையை ஆரம்பிப்போம்.

## விஸ்கி நாடகம்

ஒருவழியாக அடால்ஃப் ஐக்மெனைப் பிடித்துவிட்டோம். இனிமேல் அவரைப் பேசவைப்பது எப்படி? உண்மையை ஒப்புக்கொள்ள வைப்பது எப்படி?

முரண்டு பிடிக்கும் ஒருவரை வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்றால் அதற்கு நிறைய உத்திகள் இருக்கின்றன. அன்பாகச் சொல்லலாம், ஆசை காட்டலாம், இரண்டுக்கும் பணியாவிட்டால் மிரட்டலாம், அடிக்கலாம், போதை ஊசிபோட்டு அரைமயக்கத்தில் நிஜத்தைக் கக்கவைக்கலாம்.

ஆனால் இதெல்லாம் ஒன்றரையணா கிரிமினல்களிடம் பயன்படும். அடால்ஃப் ஐக்மென்மாதிரி ஓர் அயோக்கிய சிகாமணி அத்தனை சுலபத்தில் மசிந்துவிடுவானா? ரஃபி எய்டனுக்குச் சந்தேகமாகவே இருந்தது.

ஆகவேதான் அவர் கொஞ்சம் வித்தியாசமான ஒரு வழியைப் பயன்படுத்தினார். ஐக்மெனைத் தனிமையில் தள்ளிவிடுவது அவரிடம் ஒரு வார்த்தை கூடப் போசாமல் மிரட்டாமல் அடுத்து என்ன நடக்குமோ என்கிற பயத்திலேயே அவரைக் குழப்பியடிப்பது நடுங்கச்செய்வது இப்படி அவருடைய மனத் தில் இருக்கும் கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் பிய்த்து எடுத்துவிட்டால் வேறு வழியில்லாமல் பார்ட்டி உளற ஆரம்பித்துவிடும் அதில் சந்தேகமே இல்லை.



முந்தின நாள் இரவு ஐக்மெனைக் கடத்தியது முதல் இஸ்ரேல் உளவாளிகள் யாரும் அவரிடம் பேசவில்லை. பல லட்சம் யூதர்களை இரக்கமற்றுக் கொன்று குவித்த நீசனே உன்னை என்ன செய்கிறோம் பார் என்று வீர வசனம் கிடையாது. நீ செய்த அக்கிரமத்துக்கெல்லாம் தெய்வம் சரியான தண்டனை கொடுத்துவிட்டது என்று உணர்ச்சிவயப்படவில்லை. மவனே! அன்றைக்கு என்ன ஆட்டம் ஆடினாய். இப்ப உன்னை யார் காப்பாத்து வாங்க? என்று முகத்தில் இடிக்கவில்லை. எதற்காக இந்தக் கடத்தல் அடுத்து அவரை எங்கே கொண்டு செல்லப் போகிறார்கள், என்ன செய்யப்போகிறார்கள் என்று எந்த விவரமும் அவருக்குத் தெரிந்துவிடாதபடி மூடிய அறைக்குள் தனியே குழப்பவிட்டார்கள்.

ஆங்கிலத்தில் இதனை psychological Torture என்று சொல்வார்கள். எப்பேர்பட்ட வலுவான மனிதனையும் இப்படி அடுத்து என்ன என்று தெரியாதபடி தவிக்கவிட்டால் அவனுடைய மனமும் உடலும் சோர்ந்து போய் விடும். அதன்பிறகு அவனைப் பேசவைப்பது சுலபம்.

ராத்திரிமுழுக்கச் சங்கிலிகளில் கட்டிப் போடப்படிருந்த ஐக்மெனை மறுநாள் காலை வெளியே கொண்டு வந்தார்கள். அவரிடம் ஒரே ஒரு கேள்வி கேட்டார் ரஃபி எய்டன் உன்பேர் என்ன?

ரிகார்டோ க்ளெமென்ட் அது இப்போ நீ வெச்சுகிட்ட பேர் அதுக்கு முன்னாடி?

சட்டென்று பதில் வந்தது அடால்ஃப் ஐக்மென்

அவ்வளவுதான் மறுபடியும் அவரை அறைக்குள் வைத்துப் பூட்டச் சொல்லிட்டார் ரஃபி எய்டன்.

அடுத்த ஒரு வாரத்துக்க அந்த வீட்டில் இருந்த யாரும் ஐக்மெனுடன் பேசவில்லை. வேளாவேளைக்குச் சாப்பாடு தருவார்கள். வேறு ஏதாவது வேண்டும் என்று கேட்டால் கொண்டுவருவார்கள் மற்றபடி அவரை அடிப்பதோ, உதைப்பதோ, மிரட்டுவதோ கிடையாது. யூதர்களின் மிகப் பெரிய விரோதி எதிரில் இருக்கிறான் என்று தெரிந்தும் கூட அந்த இஸ்ரேலியர்கள் தங்களுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு மௌனமாக இருந்தார்கள்.

காரணம் அவர்களுடைய கடமை இன்னும் முடியவில்லை அடால்ஃப் ஐக்மெனைக் கடத்தினால் மட்டும் போதாது அர்ஜென்டினா பொலிஸூக்கோ, அரசாங்கத்துக்கோ தெரியாதபடி அவரைப் பத்திரமாக இஸ்ரேலுக்குக் கொண்டு செல்லவேண்டும் நீதிமன்றத்தின்முன் நிறுத்த வேண்டும்.

சென்னையில் இருக்கிற ஒருவரை மதுரைக்குக் கடத்தவேண்டுமென்றால் ஒருவண்டி போதும் ஆனால் அதோ பார்டியை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றால் ரொம்பக் கஷ்டம். பாஸ்போர்ட், விசா, இன்னும் என்னென்னவோ ஆவணங்கள் தேவைப்படும், விமான நிலையத்தில் ஆயிரம் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

மொசாட் இதுமாதிரியான காகிதச் சடங்குகளில் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. அடால்ஃப் ஐக்மென்னை அவர்கள் பிடித்துவைத்திருக்கிற விடயம் தெரிந்தால் உடனடியாக அர்ஜென்டினா அரசாங்கம் உஷாராகிவிடும். அங்கிருந்து ஒரு காக்கா குருவிகூட வெளியே பறக்கமுடியாதபடி வேலி போட்டுவிடுவார்கள்.

ஆனால் இந்தக் கடத்தலைப்பற்றி ஆயிரம் விடயம் யோசித்த மொசாட் இதைமட்டும் விட்டுவைப்பார்களா? அதற்கும் கச்சிதமாக ஒரு திட்டம் தயார் செய்திருந்தார்கள்.

அடால்ஃப் ஐக்மென் கடத்தப்பட்டு பத்து நாள் கழித்து அவருக்கு ஒரு புதிய ஆடை அணிவிக்கப்பட்டது. விமான அதிகாரி யூனிஃபார்ம்!

இந்தப் பத்து நாட்களுக்குள் ஐக்மென் மனதளவில் ரொம்பத் தளர்ந்திருந்தார். இனிமேல் இங்கிருந்து தப்பிக்க முடியும் என்கிற நம்பிக்கை சுத்தமாகக் காணாமல் போயிருந்தது. தன்னைக் கடத்தியவர்கள் எது சொன்னாலும் மறுபேச்சு இல்லாமல் ஒத்துழைக்கிற மனோநிலைக்கு வந்திருந்தார். அடால்ஃப் ஐக்மென் விமான அதிகாரி சீருடையை அணிந்து கொண்டதும் அடுத்த ஸ்பெஷல் ஐட்டம் வந்து சேர்ந்தது ஒரு பாட்டல் விஸ்கி!

யூனிஃபார்ம்சரி விஸ்கி எதற்கு, பேசாமல் குடி என்று மட்டும் சைகை காட்டினார்கள்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

பகுதியில் விசேட நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் வவுனியா, சூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 33 வயது இளைஞர் ஒருவரிடம் இருந்து 3 கிராம் 300 மில்லிக்கிராம் ஐஸ்போதைப் பொருளும், நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 31 வயது இளைஞர் ஒருவரிடம் இருந்து 266 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளும், யாழ்ப்பாணம், நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவரிடம் இருந்து 230 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த மூவரும் பண்டாரிக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா போதை ஒழிப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,250)

## வல்லிபுரத்தில்...

வீதியில் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு அருகாமையில் துவிச்சக்கர வண்டியில் சென்றவரை பட்டா ரக வாகனம் மோதியது.

இதில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மீண்டும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை (18) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7,60)

## குற்றப் புல...

கூட்டுத்தாபனத்தில் நடந்ததாகக் கூறப்படும் மோசடி தொடர்பாக முறைப்பாடளிப்பதற்காக அவர் அங்கு பிரசன்னமாகினார். (ம-7)

## முன்னாள்...

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் சமர்ப்பித்த சமர்ப்பணங்களைப் பரிசீலித்த பின்னர்,

கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டத்தை கொரிய நிறுவனத்துக்கு ஒப்படைத்து அரசாங்கத்துக்கு 2.63 மில்லியனுக்கு அதிகமாக நஷ்டத்தை ஏற்படுத்தியதற்காக ராஜித சேனாரத்னவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனுவெல கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## லலித், குகன்...

பில் ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அஜித்குமார நேற்று கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் அளித்தார்.

கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் 2010ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமல் போன லலித் மற்றும் குகன் மீதான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அஜித் குமார இவ்வாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அஜித் குமார,

“10.12.2010 அன்று மக்கள் போராட்ட இயக்கம் யாழ்ப்பாணம் நகரில் ஒரு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்த லலித் குமார் மற்றும் குகன் முருகானந்தம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பிற்காக நான் யாழ்ப்பாணம் சென்றபோது, அந்த இருவரும் கடத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவம் அப்போதைய முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் நடந்தது. இது குறித்து விசாரணை நடத்துமாறு ஒவ்வொரு அரசாங்கத்தையும் நாங்கள் கோரினோம்.

இந்த அரசாங்கத்தின்போது தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து வாக்குமூலம் அளிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களம் எனக்கு அறிவித்திருந்தது” என்றார். (ம-7)

## சாவகச்சேரி...

மேற்படி இளைஞனுடைய தொலைபேசிக்கு அழைப்பெடுத்து வரவழைத்த நிலையிலேயே கத்திக் குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் பளைப் பகுதியைச் சேர்ந்த 31 வயதான இளைஞன் ஒருவரே கத்திக்குத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கத்திக்குத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## உதவிப்...

எரிந்து யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் தமிழினி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஆறு மாத கர்ப்பிணியாக இருந்த குறித்த உதவிப் பிரதேச செயலாளரான பெண் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி உயிரிழந்தார்.

இவருக்கு ஆறு வயதில் பெண் குழந்தை ஒன்றும் உள்ளது.

இந்நிலையில் இறந்த தமிழினியின் பெற்றோர் தரப்பில் கணவரான கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வரும் சதீஸ் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் கொழும்பில் இருந்து வந்த விசேட பொலிஸ் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

படுக்கை அறையில் மெழுகு திரி எரிந்து தீ விபத்து ஏற்பட்டதாக வைத்தியசாலை முறைப்பாட்டில் முன்னதாக தெரிவிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வத்திராயனில்...

வடமராட்சி கிழக்கு வத்திராயன் முருகன் கோயிலிற்கு அருகாமையில் நேற்றுப் பிற்பகல் வெடிக்காத நிலையில் வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக அத்திபாரம் வெட்டிக் கொண்டிருந்தபோது மண்ணில் புதைந்திருந்த நிலையில் எறிகணை ஒன்றைக் கண்டுள்ளனர்.

இந்நிலையில் உடனடியாகக் கட்டுமான வேலைகளை நிறுத்திவிட்டு சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து பிற்பகல் 5 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்றிருந்த மருதங்கேணி பொலிஸார் குறித்த வெடிகுண்டை மீட்டுள்ளனர்.

இது யுத்த காலத்தில் ஏவப்பட்ட எறிகணையாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.07.18
சீட்டிழுப்பு இலக்கம் 5894
X 8 2 9 4 1 7
அத சம்பத
X 9 4 1 7
சீட்டிழுப்பு இலக்கம் 0469
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.07.18
சீட்டிழுப்பு இலக்கம் 0010
மிதுனம் 20 39 47 50
NLB

தன நிதானய
திகதி - 2025.07.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1924
E 06 15 16 68 E
Double Chance 59052

மெகா பவர்
திகதி 18/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2242
F 14 04 10 37 73
Double Chance

ஜய ஜய
திகதி 2025.07.18
சீட்டிழுப்பு இலக்கம் 0162
B 2 6 4 3
NLB

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4136
சீட்டிழுப்பு திகதி 18.07.2025
D 49 59 71 73
D
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.18
சீட்டிழுப்பு இலக்கம் 1203
மீனம் 01 17 45 50 மீனம்
98373 06

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.07.2025
வெற்றி வாரம் 0602
F 7 2 1 5 8 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,073,617.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2868
சீட்டிழுப்பு திகதி 2025.07.18
தினம் வெள்ளிக்கிழமை
24 59 67 71 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,240,538.40
DLB

சனிதா
திகதி 18.07.2025 வெற்றி வாரம் 5029
14 28 34 39 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,961,952.40
ரூ. 50,000/-
DLB

சசிரி
வெற்றி வாரம் 728
சீட்டிழுப்பு திகதி 18.07.2025
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 12 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4580
சீட்டிழுப்பு திகதி 18.07.2025
தினம் வெள்ளிக்கிழமை
01 03 11 22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,847,452.80
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 15 04 56 65 70
2044
18.07.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.583,104,921.00
DLB

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2694
சீட்டிழுப்பு திகதி : 2025.07.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,241,045.60
அத கோடிபதி ADA KOTIPATHI
18 26 50 51 A
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2024 வருடம் சேர்ந்தது

**வெளிவந்து விற்பனையாகிறது**

2024 ம் ஆண்டு சேர்க்கப்பட்ட
A/L கடந்த கால வினா விடைகள்

மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவு
வியாபாரிகளுக்கு 20%, 25%, 30% வீத விசேட விலைக்கழிவுகள்

பூபாலசிங்கம் புத்தகசாலை
212, முதலாம் குறுக்குத்தெரு, வேம்படிசந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 1637 (C-3448)

# வாகன விபத்து; ஒருவர் மரணம்

கொழும்பு - கண்டி வீதியில் பட்டிய சந்திக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பேலியகொடையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த நபர் மீது மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தொடர்பில் இது வரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் கோவிலில் இருந்து 500 மீற்றர் தூரத்தில்
2 பரப்பு காணி, 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
வீடு கட்டவும், தோட்டம் செய்யவும் ஏற்ற செம்மண் காணி
077 129 8159 (4836)

## வேலைவாய்ப்பு

யாழ்.நகர் மற்றும் தென்மராட்சி பகுதிகளில் கணினித் துறைகளில் பணியாற்றுவதற்கு அனுபவம் வாய்ந்த/ அனுபவமற்ற பெண் பணியாளர்கள் தேவை.
Digitec Technology
077 868 8517 (4817)

## கடைத்தொகுதி விற்பனைக்கு

இராமநாதன் வீதியில் (பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்) அமைந்துள்ள கடைத்தொகுதியுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு.
மேலதிக விபரங்களுக்கு 077 806 6086 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (தரகர் தேவையில்லை). (4821)

## பகுதிநேர/ முழுநேர வேலையாட்கள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள பலசரக்குக் கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு :
077 590 9501 (1342)

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்)

"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020 (4838)

Hotline : 071 535 7799/ 071 535 7803

## வைத்தியம்


கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி |
இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்.
மிகச்சிறந்த மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (1341)

"கல்வியுலகில் கலங்கரை விளக்கு"

NEC

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
யாழ்.நகரில் அனுபவம் மிக்க விசேட ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில்.....
A/L 2027 கலை வர்த்தகம்
ஆரம்பம் : 19.07.2025 சனி
காலை: 8.00 மணி
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 076 535 0999 (C-3434)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22 - 05 - 1936 | 16 - 07 - 2025 |

### திரு. கணபதிப்பிள்ளை இரத்தினம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கணபதிப்பிள்ளை இரத்தினம் அவர்கள் (16.07.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தவமணி அவர்களின் பாசமிகு கணவரும் கேதீஸ்வரன் (ஈசன் - ஜேர்மனி), கவிதா (ஆசிரியை - யா/ஆனைப்பந்தி மெ.மி.வி), காலஞ்சென்றவர்களான கஜேந்திரன் (மாலன்), வனிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஜலஷ்சுமி (ஜேர்மனி), சிவகாந்தி (இணைப்பாளர் - செயற்பட்டு மகிழ்வோம் - யாழ். கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, நடராஜா, இராசதுரை, அன்னலட்சுமி, தங்கம்மா, பசுபதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனபாலசிங்கம் (சுவிஸ்), புவனேஸ்வரி (சுவிஸ்), லோகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கனகம்மா, நடராசா, பராசக்தி, ஆனந்தகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சயந்தினி, விஷாலினி, கனிசிகா, ரேஸ்மிகா, பிறின்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.51, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
021 222 7682
077 704 0960
(C-3447)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400 | France 11Kg - 2200 | Germany 11Kg - 2000
Swiss 11Kg - 2470 | Australia 11Kg - 2130 | Italy 11Kg - 2250

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-3449)

## வீடு வளவும் நெற் காணியும் விற்பனைக்கு

சுழிபுரம் மத்தி பறாளை வீதியில் அமைந்துள்ள 6 1/2 விஸ்தீரணம் உள்ள வளவும் அதனுள் அமைந்த 3 அறைகள், கோல், சமையலறையும் தனிக் கிணறும் உடைய வீடும்
பறாளை வயல் வெளியில் அமைந்த 6 பரப்பு நெற்பரப்பு காணியும் விற்பனைக்குள்ளது. (4809)

077 744 8080

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 210/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 248/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 389/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 235/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 205/= | |
| 1Kg நீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா | - 2800/= | |
| 1Kg மல்லி (M) | - 356/= | |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 865/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 899/= | |
| 1Kg கடலை | - 385/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| 400g விம் கட்டி | - 250/= | 265/= |

Max 02 — 400g Anchor 1100/=
1Kg சவர்க்காரம் Sunlight 2in1 270/= 320/=

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (1343)

Happy Supermarket
0777 8080 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.